**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - 2017**

---

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 செப்தெம்பர் 17 ஆந் திகதிய 3267 (எஸ்ஆர்ஐ) இலக்க கடன் உடன்படிக்கையின் 4.06 (அ) ஆம் உறுப்புரை மற்றும் 3268 (எஸ்எவ்) இலக்க கடன் உடன்படிக்கையின் 4.03 (அ) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்டப் பகுதிகளிலுள்ள விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்கான நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 28,713 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 190 மில்லியனானதுடன் அதில் ரூபா 22,668 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2015 யூன் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு

போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்புக்கள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்புக்கள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடு

மேல் ஏலஹர கால்வாய் செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் மற்றும் மினிப்பே இடப்பக்க வங்கி புணரமைப்பு செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 உள்ளவாறான ரூபா 35.41 மில்லியன் தொகையான செலுத்தவேண்டிய மீதிகள் கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

2016 மார்ச் 24 இன் 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகின் ஆளணிக்கு 65 வயதை விட கூடுதலான நபர்களினை ஆட்சேர்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், சிரேஷ்ட பொறியியலாளரொருவராக நிகழ்ச்சித்திட்டத்தினால் 65 வயதை விட கூடுதலான நபர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 751,200 தொகை ஊதியங்களாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடீபீ | | | | | | | |
| -கடன் இல. 3267 | 76.00 | 11,485.10 | 2,068.48 | 3.70 | 561.60 | 6.60 | 998.80 |
| -கடன் இல. 3268 | 74.00 | 11,182.90 | 1,996.32 | 6.40 | 974.40 | 12.50 | 1,833.80 |
| இலங்கை அரசாங்கம் | 40.00 | 6,044.80 | 786.20 | 2.90 | 436.40 | 5.10 | 752.70 |
| **மொத்தம்** | **190.0** | **28,712.80** | **4,851.00** | **13.00** | **1,972.40** | **24.20** | **3,585.30** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், எலஹர கால்வாய் செயற்திட்டத்தின் மேல் நிர்மாணம், வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டத்தின் நிர்மாணம், மினிப்பே இடது வங்கி கால்வாய் செயற்திட்டத்தின் புரநிர்மாணம் மற்றும் ஆலோசனை சேவைகளினை வழங்குதல் போன்ற 04 பிரதான மூலக்கூறுகளின் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்படுத்துவதற்கு பட்டியல்படுத்தப்பட்டதுடன் அந்த வேலைகளின் 14 சதவீத பௌதீக செயலாற்றலினை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தங்களினை வழங்குவதிலுள்ள தாமதங்கள் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வேலைகளின் பௌதீக செயலாற்றல் 08 சதவீதம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது. மேலும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், களுகங்கையின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம், எலஹர கால்வாய் செயற்திட்டத்தின் கீழான மொரகஹாகந்த பரிமாற்ற கால்வாய் மீளாய்வாண்டின் போது வழங்குவதற்கு பட்டியல்படுத்தப்பட்டதுடன் பெறுகை நடைமுறைகளின் பிரயோகங்களிலுள்ள சிக்கல் காரணமாக, வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், அவற்றிக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,819 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் ரூபா 352 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டத்தின் வேலைத்திட்டத்தின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அவற்றில், 2016 திசெம்பர் 29 இல் வெமெதில்ல இடது வங்கி பிரதான கால்வாய் தொடக்கம் நெபதகஹவத்த வரையான முன்னேற்றத்திற்கான ஒப்பந்தம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொடர்புடைய ஒப்பந்த நிர்மாண வேலைகளின் பௌதீக செயலாற்றல் மீளாய்வாண்டின் போது 05 சதவீத மந்தத்தில் காணப்பட்டது.

(இ) ஆலோசகரின் வடிவமைப்புக்களின் அனுமதியிலுள்ள தாமதங்கள் காரணமாக வெமெதில்ல புதிய மதகு வாயில்களின் நிர்மாண வேலைகள் 08 மாதங்களுக்கு மேலாக கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மினிப்பே இடது வங்கியின் மீள்நிர்மாண வேலைகளுக்கான செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்படுதவற்கு எதிர்பார்க்கப்பட்ட 06 சிவில் வேலைகள் ஒப்பந்தங்களில் 04 சிவில் வேலைகள் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த நிர்மாண வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 சதவீத எதிர்ப்பார்க்கப்பட்ட செயலாற்றலினை விட 17 சதவீதமான மந்தமான செயலாற்றலினை அறிக்கையிட்டிருந்தது. செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களின் பேரில் அறுவடை நோக்கங்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டமையினால் மீள்நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டது

(உ) ஆலோசகர்களினை தெரிவு செய்வதில் எழுந்த சர்ச்சைகள் காரணமாக, முறைமை வினைத்திறன் முன்னேற்றம் மற்றும் நீர் உற்பத்தித்திறனின் ஆலோசனை சேவைகளுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 77 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறைப்பயன்பாடுடையதாகத் தொடர்ந்தும் காணப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

கிரிதல பாதுகாக்கப்பட்ட காட்டினை குறுக்கறுத்து மொரகஹகன்ந்த தாங்கியிலிருந்து கொன்கெடிய தாங்கி வரை 6.20 கிலோமீற்றர் நீளத்துடன் நீர்ப்பாசன கால்வாயொன்றினை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 03 இடங்களில் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தினால் பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்ட தாங்கி அணைக்கட்டின் உயரம் நீர்ப்பாய்ச்சல் நோக்கங்களுக்கு போதுமையற்றமையாகக் காணப்பட்டமை மற்றும் இந்த செயற்திட்டத்தின் கீழ் அணைக்கட்டின் மட்டத்தினை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய வேண்டப்படும் மேலதிக வேலைகளினால், மொரகஹகன்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொன்கெடிய தாங்கியின் மீள்நிர்மாண வேலைகள் வெற்றிகரமற்றுக் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் விளைவொன்றாக, ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வேலைகளினைப் பூர்த்திசெய்யும் சாத்தியக்கூறு ஐயத்திற்குரியதாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.

### 3.4 சுற்றுச்சூழல் விடயங்கள் மீதான சர்ச்சைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேல் எலஹர கால்வாய் அபிவிருத்தி வேலைகள் காரணமாக, ஏற்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் சேதங்களினை குறைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்துவதற்கு ரூபா 94.80 மில்லியன் தொகையொன்று ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 1.10 மில்லியன் கிரயமொன்றில் அவற்றின் மீது தகவல் நோக்கங்களுக்காக 07 சைகை காட்டும் பலகைகள் அமைக்கப்பட்டிருந்தது. மேலும், எலஹர பிரதேசத்தில் 500 ஏக்கரில் மரங்களினை நடுவதற்கு மற்றும் காடொன்றாக பேணுவதற்கு ஒப்பந்தகாரர்

நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேல் எலஹர கால்வாயின் இரண்டு பக்கத்தினதும் 03 கிலோமீற்றரான கிரிதல பாதுகாக்கப்பட்ட வனத்தின் காணி சுத்தஞ்செய்யப்பட்டிருந்ததுடன் பரிந்துரைக்கப்பட்ட மரங்களினை நடுவதற்கு ஒப்பந்தகாரரினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காமை 2018 ஏப்ரல் 03 இல் மேற்கொள்ளப்பட்ட கள விஜயத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) 30.14 கிலோமீற்றர்கள் வரையான மினிப்பே இடது வங்கி கால்வாயின் மீள்நிர்மாண வேலைகள் காரணமாக, ஏற்படுத்தப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புக்களினை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்துவதற்கு ஒப்பந்த உடன்படிக்கையில் ரூபா 12.40 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ஒப்பந்ததாரரினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளில் வேண்டப்பட்டவாறு, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் பிரதேசத்திலுள்ள 145 ஏக்கரில் மரங்களினை நடுவதற்கு கூட ஒப்பந்ததாரரினால் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

### 3.5 குறையப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

பொல்பிதிகமயிலுள்ள நீர்பாசன திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடங்களின் முன்னேற்ற வேலைகள் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பொருத்தப்பட்ட பொருட்கள் மற்றும் பொருத்துதல்களினை கொள்வனவு செய்வதற்கு மற்றும் ஏனைய புனர்நிர்மாண வேலைகளுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 9.8 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 மே 10 இல் மேற்கொள்ளப்பட்ட கள பரீட்சிப்பில் தொடர்புடைய கட்டிடம் செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் பயன்படுத்தப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்றதை வெளிப்படுத்தப்பட்டது.

### 3.6 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டத்தினால் ஏற்பட்ட செலவினம் ரூபா 1,535.57 மில்லியன் தொகை அந்த திகதியில் உள்ளவாறு பொதுத் திறைசேரியினால் பேணப்பட்ட பதிவுகளில் காட்டப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் ரூபா 1,506.22 மில்லியன் தொகை கிரயத்துடன் இணங்கியிருக்கவில்லை. பொதுத் திறைசேரியின் பதிவுகளில் கடன் வட்டியின் மூலதனமயமாக்களின் மீது ரூபா 48.74 மில்லியன் தொகையான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் நிகழச்சித்திட்ட கண்காணிப்பு அலகினால் நேரிட்ட ரூபா 78.09 மில்லியன் தொகையான தேறிய மீதி செலவுகளின் பதிவுக்கு சரிப்படுத்தலின் மேற்கொள்ளப்பட்டமை மேற்குறித்த வித்தியாசத்திற்கு பிரதான காரணங்களாகக் காணப்பட்டன.

### 3.7 மனித வளங்கல் முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் பதவியணியினார் 185 பதவியணியினர் நிலைகளினைக் கொண்டுள்ளதுடன், அதில் 02 பிரதி செயற்திட்ட பணிப்பாளர்கள், 14 செயற்திட்ட பொறியியலாளர்கள் மற்றும் 10 சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக முக்கிய பதவிகளில் 85 உத்தியோகத்தர்கள் 02 வருடங்களுக்கு மேலாக வெற்றிடம் தொடர்ந்தும் காணப்பட்டது.